சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

அசல் வழக்கு எண். **19 / 2022**

வா.சா.**1-** ஜெயச்சந்திரன், நாள் **- 19.03.2024.**

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு, **3**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் தற்போது சென்னையிலிருக்கிறேன். ஐய்யனார்குளத்தில் குடியிருப்பதாகச் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து என் அப்பாவிற்கு எப்படிப் பாத்தியப்பட்டது என்றால் அது என் பாட்டனார் வீட்டுச் சொத்து. என் அப்பா ஒத்தி கொடுத்தது தெரியும் என்றால் கேள்விப்பட்டேன். எந்த ஆண்டு, எப்போது பிழைப்புக்காக போனேன் என்றால் 1980 ஆம் ஆண்டு போனேன். நான், என் தந்தை, என் தாயார் மற்றும் என் சகோதரிகள் அனைவரும் சென்றுவிட்டோம். ஊருக்கு திருவிழா மற்றும் விசேசங்களுக்கு வருவோம் என்றால் வரவில்லை. என் அப்பாவிற்கு பாட்டன் சொத்து இருப்பது தெரியுமா என்றால் அப்பா சொல்லித் தெரியும். அதில் விவசாயம் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை என்றால் சரிதான். எனக்கு ஆதார் மற்றும் ரேசன் கார்டு உள்ளது. மேற்படி ஆவணங்கள் வழக்கில் போட்டுள்ளேன். ஆதார் மற்றும் ரேசன் கார்டு எந்த ஆண்டு எடுக்கப்பட்டது என்றால் தெரியாது. என் அம்மா, அப்பாவிற்குரிய ரேசன் கார்டு மற்றும் ஆதார் கார்டு இருக்கிறது. என் அப்பாவின் இறப்புச் சான்று போட்டுள்ளேன். என் அப்பா எப்போது, எங்கு இறந்தார் என்றால் அய்யனார் குளத்தில் இறந்தார். நான் தாக்கல் செய்துள்ள இறப்புச் சான்றிதழ், வாரிசு குளத்தில் ஐய்யனார் குளத்தில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்திற்குரிய பட்டா, சிட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா கையெழுத்துப் போடுவார். தாவா சொத்தை தவிர மற்ற சொத்துக்களை என் அப்பா

கையெழுத்து போட்டு விற்ற கிரையம் ஆவணங்கள் என்னிடம் உள்ளது. எனக்கும், மற்ற வாதிகளுக்கும் உள்ள பிறப்புச் சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகளின் பிறப்புச் சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யாமல் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிறப்புச் சான்றிதழை தாக்கல் செய்ததால்தான் தாவா சொத்தை என் அப்பா கிரையம் கொடுக்கும்போது, வாதிகள் நாங்கள் இளவராக இருந்தது தெரியவரும் என்றால் சரிதான். 1990 கிரைய ஆவணத்தில் என் அப்பா கையெழுத்துப் போடவில்லை எனச் சொல்லியுள்ளேன். மேற்படி ஆவணத்தில் என் அப்பாதான் கையெழுத்துப் போட்டுள்ளார் என்றும், தற்போது சொத்தை கிரையம் பெற்ற பிரதிவாதியிடம் பணத்தைப் பெற வேண்டும் என்பதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தில் என் தகப்பனாரின் கையெழுத்து இல்லை என்றால், என் தகப்பனாரின் கையெழுத்து அடங்கிய வேறு ஆவணங்களை தாக்கல் செய்து, என் தகப்பனாரின் கையெழுத்து இல்லை என தெளிவுபடுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் கிரையம் பெற்ற பிறகு, தாவா சொத்து 3 கிரையதாரர்கள் கிரையம் வாங்கி, வருவாய் ஆவணங்கள் மாற்றி அனுபவித்து வருகிறார் என்றும், அந்த விபரம் எனக்குத் தெரியும் என்றாலும், பிரதிவாதிகளிடம் பணத்தை அபகரிக்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி ஊருக்கு வந்து போகும்போது பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்பது தெரியும், தற்போது காலங்கடந்து வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அம்மா இறந்தபிறகுதான் தெரியும். பிரதிவாதிகள் சட்டப்படி தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 19.03.2024.

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.